யாழ்ப்பாணம்
[illegible] நூலகம்.

உதயன்

விலை ரூபா 6-00

மலர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 11 செவ்வாய்க்கிழமை (26-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily இதழ் 283

# பொலீஸ் ஜீப் முன் பாய்ந்த தற்கொலைக் குண்டுதாரி

## திருமலையில் நேற்றுச் சம்பவம்

பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொலிஸ் ஜீப் முன்னால் பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் பாய்ந்தார்.

திருகோணமலை உள்துறைமுக வீதியில் அமைந்துள்ள மீன்பிடி அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 8-30 மணி அளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஜீப் சாரதி காயம் அடைந்தார்.

ஜீப்பில் வேறு எவரும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. பெண் தற்கொலைக் குண்டுதாரி அந்த இடத்திலேயே உடல் சிதறி மரணமடைந்தார்.

இதனை அடுத்து படையினர் நகரப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

அதேசமயம் நேற்றுப் பிற்பகல் திருகோணமலை நகரப் பகுதியில் இரு பெரும் வெடிச் சத்தங்கள் கேட்டன.

இது குறித்து நேற்று இரவு வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (இ-150-3)

யாழ். நகரில் நேற்று

# பொலீஸார் உட்பட அறுவர் குண்டு வெடிப்பில் காயம்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். நகரப்பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரு பொலீஸார் உட்பட அறுவர் காயமடைந்தனர்.

யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு முன்பாக — ஆஸ்பத்திரி பொலிஸ் நிலையம் முன்பாக — நேற்றுக் காலை 11.45 மணி அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. கிரனேட் ஒன்றே வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநோயாளர் பிரிவில் இருந்த நால்வரும் வெளியே நின்ற ஒருவருமே காயமடைந்த பொதுமக்கள் ஆவர்.

நிதர்சன் (5 வயது—யாழ்ப்பாணம் ஐந்து சந்தி), பி. இரத்தினசிங்கம் (47 வயது — கொழும்புத்துறை), என். அன்னலட்சுமி (60 வயது — தாவடி), ஏ. பொன்னுத்துரை (70 வயது — இராசாவின் தோட்டம்) ஆகியோரும் மற்றுமொரு பெண்ணுமே காயமடைந்தனர்.

இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸார்-படையினர் இணைந்து கொழும்பு நகரில் பெரும் தேடுதல்!

## 180 தமிழ் இளைஞர்-யுவதிகள் கைது

கொழும்பு, நவம்பர் 26

மாவீரர் தினத்தை முன்னிட்டு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று கருதப்பட்டதால் கொழும்பில் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் பொலீஸாரும் முப்படையினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தேடுதலின் போது 180 தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்கொலைப்படையைச் சேர்ந்த ஒரு குழு நகருக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது என்று கொழும்பு பிரதிப் பொலீஸ் மா அதிபர் எம். டி. என் திஸநாயக்க தெரிவித்தார்.

புலிகளுக்கு உதவுகின்றனர் என்ற சந்தேகத்தில் சிலரைப் படையினர் தேடி வருவதாகவும் அவர் கூறினார்.

கொழும்புக்குள் நுழையும் சகல வாசல்களிலும் வாகனங்கள் பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கடற்படையினர் வசமுள்ள 39 இந்திய மீனவர்கள்!

### விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

சென்னை, நவ. 26

இலங்கை கடற்படையினர் பிடித்து வைத்திருக்கும் 39 இந்திய மீனவர்களை விடுவிக்கவும், அவர்களது 9 இயந்திரப் படகுகளை மீட்கவும் தமிழக அரசு முயற்சி மேற்கொள்ளும் என்று தமிழ் நாடு மாநில மீன் வளத்துறை அமைச்சர் திருமதி ஜனீபர் சந்திரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இராமேஸ்வரம் அருகே நடராசாபுரத்தில் 56 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுவரும் தொகுப்பு வீடுகளையும் —

இராமகிருஷ்ணாபுரத்தில் 26 லட்சம் ரூபா செலவில் மீனவர்களுக்காகக் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளையும் — பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# விமான விபத்தில் கொல்லப்பட்ட இலங்கையர் 9 பேரும் தமிழர்கள்

கொழும்பு, நவ. 26

கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்டு பின்னர் இந்து சமுத்திரத்தில் வீழ்ந்து நொருங்கிய எதியோப்பிய ஏயர் லைனின் 'போயிங் — 747' விமானத்தில் இருந்த 9 இலங்கையர்களும் தமிழர்கள் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானம் வீழ்ந்து நொருங்கிய போது கொல்லப்பட்ட 120 பேரில் இந்த 9 தமிழர்களும் அடங்குவர் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

விபத்தில் தப்பியவர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டிருப்பதாகவும் —

அதில் இந்த 9 இலங்கைத் தமிழர்களின் பெயர்களும் இடம்பெறவில்லை என்றும்— பம்பாயில் உள்ள இலங்கைத் தூதரக அலுவலகம் தெரிவிக்கிறது.

எனவே இந்த 9 பேரும் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படுவதாக இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த 9 பேரின் பெயர்களும் வருமாறு:-

செல்லத்தம்பி, சீனிவாசன், செல்வி சீனிவாசன், டி. கனகரட்ணம், செல்வி கந்தையா, ஏ. பாலகிருஷ்ணன், செல்வி தங்கவேலு, செல்வி பரமலிங்கம், செல்வி நல்லநாதன்.

இவர்கள் சிங்கப்பூரிலிருந்து தமது பயணத்தை ஆரம்பித்திருந்தனர். நைஜீரியாவில் உள்ள லாகோஸுக்குப் போவதே இவர்களின் நோக்கமாக இருந்தது. லாகோஸ் போய்ச் சேர்ந்ததும் இவர்கள் திரும்பவும் பம்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கும் இறங்குவதற்கு [illegible] அனுப்பப்பட்டனர். இப்படி அனுப்பப்பட்ட போதே விபத்து சம்பவித்துள்ளது.

இலங்கையில் பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்திலிருந்து தப்பி ஏதாவது ஒரு நாட்டில் அரசியல் தஞ்சம் பெறுவதற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் விமானச்சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், நவ. 26

இன்று செவ்வாய்க்கிழமை பலாலிக்கும், இரத்மலானைக்கும் இடையிலான பயணிகள் விமானச்சேவை நடைபெறமாட்டாது.

இன்று விமானம் மூலம் பயணத்தை மேற்கொள்ளப் பதிவுசெய்தோர் நாளை சிவில் காரியாலயத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

(இ·ரி 4)

## குண்டு பற்றி பொய்த்தகவல் கொடுத்தவர் கைதானார்!

கொழும்பு, நவ. 26

முக்கியமான தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட இருக்கிறது என்று தொலைபேசி மூலம் கொழும்பு மத்திய தொலைபேசி அதிகாரிகளுக்குப் பொய்த் தகவல் கொடுத்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என பொலீஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல்கள் நடத்தலாமென அஞ்சி பாதுகாப்புப் படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ள சூழலில் அநாமதேய தொலைபேசிப் பயமுறுத்தல்கள் வந்து கொண்டிருப்பதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

ரூ. 1 கோடி செலவில்

## புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் அபிவிருத்திகள்

### பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தகவல்

கொழும்பு, நவ. 26

வடக்கு— கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒத்துழைப்பு வழங்கும் என்றும் மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் துரை உறுதியளித்ததையடுத்து முதல் கட்டமாக இரு அபிவிருத்தித் திட்டங்களை புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நடைமுறைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இலங்கைச் சங்கீத சபை
### வருடாந்தப் பொதுக்கூட்ட
# அழைப்பு
### 30 — 11 — 1996

ஏற்கனவே அறிவித்ததற்கமைய சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 1996 - 11 - 30 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். ஆனால் மேற்படி கூட்டம் நடைபெறும் இடம் யா/நல்லூர் தெற்கு விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் இருந்து யா/ யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கின்றேன். இதுவரை சந்தாப்பணம் செலுத்தி உறுப்புரிமையைப் புதுப்பிக்காதோர் கூட்டம் நடைபெறும் இடத்தில் அன்று காலை 10 மணிக்கு முன் பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளலாம்.

இ. சிவானந்தன்
கல்விப்பணிப்பாளரும், வடஇலங்கைச்
சங்கீதசபைத் தலைவரும்
யாழ்ப்பாணம் வலயம் - I

(சி/3614)

# ஐ.தே.கவுடனான கருத்து வேறுபாடு குறைகின்றது என்கிறார் பீரிஸ்

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக அரசாங்கத்துக்கும், ஐ. தே. கவுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் குறைந்து வருகின்றன.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு நகல் திட்டம் முன்னர் கூறியது போல எதிர்வரும் ஏப்ரல் மாதம் முன்வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பிராந்திய சபை ஒன்றை அமைச்சரின் ஆலோசனையின் பேரில் கலைப்பதற்கான ஆளுநரின் அதிகாரம் —

மன்னிப்பு வழங்குவதற்கான ஆளுநரின் அதிகாரம் — என்பன பற்றி அன்று ஆராயப்பட்டது. (இ-3)

## பிரபாவுக்கு வயது 42

யாழ்ப்பாணம், நவ. 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் 42 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

அவரின் பிறந்த தினத்தை ஒட்டியும் மாவீரர் வாரத்தை ஒட்டியும், நாளை வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டும் விடுதலைப் புலிகள் இத் தினங்களில் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தக் கூடும் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. இதன் காரணமாக நாடு முழுவதும் பந்தோபஸ்து ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் முப்படையினரும், பொலீஸாரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றனர். (உ)

## பட்டப்படிப்பு விரிவுரைகள்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டப்படிப்பு விரிவுரைகள், இணைக்கப்பட்ட வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆரம்பமாகி உள்ளன.

கணக்கியலும் நிதியியலும் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டப்படிப்பு விரிவுரைகள் மேற்படி கல்லூரியின் உள்வட்ட வீதியில் அமைந்துள்ள விரிவுரை மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகின.

இதற்கு விண்ணப்பித்த டிப்ளோமா பட்டம் பெற்ற மாணவர்களும், டிப்ளோமா முதல் மூன்று ஆண்டுப் பரீட்சைகளில் சித்தி பெற்று இறுதி ஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களும் விரிவுரைகளுக்கு சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-4)

## நீரிழிவு இரத்த அழுத்த பரிசோதனை

தென்மராட்சி நவ. 26

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மிருசுவில் அரசினர் வைத்தியசாலையில் இன்று செவ்வாய்க்கிழமை இப்பகுதி மக்களுக்கு நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த பரிசோதனைகளை நடத்த உள்ளனர்.

இப்பரிசோதனைகளில் 35 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களும் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-117)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டப்படிப்பு விரிவுரைகள்

## வவுனியாவில் ஆரம்பம்

இணைக்கப்பட்ட வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரியில் கணக்கியலும் நிதியியலும் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கான பட்டப்படிப்பு விரிவுரைகள் வவுனியா இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியின் உள்வட்ட வீதியில் அமைந்துள்ள விரிவுரை மண்டபத்தில் 25-11-96 ஆம் திகதி திங்கள் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகியது. மேற்படி பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த டிப்ளோமா பட்டம் பெற்ற மாணவர்களும், டிப்ளோமா முதல் மூன்று அரையாண்டுப் பரீட்சைகளில் சித்திபெற்று இறுதியாண்டுப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்களும் விரிவுரைகளுக்கு சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இப்பட்டப் படிப்பிற்கான கட்டணங்களை 18 - 11 - 96 ஆம் திகதிக்கு முன் வவுனியா இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி அலுவலகத்தில் செலுத்துமாறு மாணவர்கள் பணிக்கப்பட்டிருந்தனர்.

— பதிவாளர்

25 - 11 - 96 (C/3613)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
06 — 04 — 1996

ஆண்டவன் அணைப்பில்:
27 — 10 — 1996

### செல்வி ரோமிலா மகேந்திரராசா

திதி: 26—11—1996

உன் குழந்தைப் பராயத்தில்
நோய் வந்து தின்றதா?
மரை வேண்டிய மொட்டே
மலராமல் போனாயோ?
புன்னகை ஓயாத உன் முகம்
எங்கள் நெஞ்சை விட்டு
ஒரு நொடியேனும்
மறையவில்லை அம்மா!

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, சகோதரி.

52, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(8998)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
1950 — 08 — 10



மறைவு:
1996 — 10 — 26

### முருகுப்பிள்ளை செல்வராஜா
(அனுசன் லொறி உரிமையாளர்)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே! அறிவின் சுடரொளியாய் ஒளிவீசி, பண்பின் சிகரமாய்த்திகழ்ந்து பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து, இறைவனடி சேர்ந்து மாதம் ஒன்றாகினும் எங்கள் இதயங்களில் என்றென்னும் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி பெற எங்கள் நெஞ்சாரப் பிரார்த்திக்கின்றோம்.

எனது கணவனின் சாவுச்செய்தி அறிந்து, இறுதிக் கிரியைகள் நடைபெறும் வரையும் எமது தோளோடு தோள் நின்று உதவிய உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

இன்று (26—11—96) செவ்வாய்க்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாகேஸ்வரி (மனைவி)
தற்போதைய இருப்பிடம்:
சின்னமமன் கோயிலடி,
ஏழாலை.

தையிட்டி.
காங்கேசன்துறை.

(9000)

## அடையாள அட்டைகள் தவறிவிட்டன

கண்ணுத்துரை சுகித்தா என்பவரின் தேசிய அடையாள அட்டையும், யாழ். பல்கலைக்கழக அடையாள அட்டையும் நந்தாவில் அம்மன் கோயிலுக்கும் புகையிரத நிலைய வீதிக்கும் இடையில் பணப்பையுடன் தவறிவிட்டன. அதனைக் கண்டெடுத்தவர்கள் கொக்குவில் சந்தியிலுள்ள மது புத்தகசாலையில் [illegible] [illegible]

(43807)

# மரண அறிவித்தல்கள்

## கபிரியேல் மத்தியாஸ்

பலாலி தெற்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட கபிரியேல் மத்தியாஸ் 24 - 11 - 96 (ஞாயிற்றுக்கிழமை) அன்று வவுனிக்குளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மத்தியாஸ் றெஜீனாவின் அன்புக் கணவரும், அந்தோனிமுத்து (கனடா - முன்னாள் விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), திரேசா (பிரான்ஸ்), கொலஸ்ரீகா இந்துராணி, அன்ரன் ஸ்ரனிஸ்லஸ், நெக்சிடா நந்தறோகினி (பிரான்ஸ்—முன்னாள் ஆசிரியை, கோப்பாய் மகா வித்தியாலயம்), அன்ரன் ஜோர்ஜ் (கனடா), ஜெயேந்திரன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், எட்விஸ் மதிவதனி (கனடா), அலக்சியஸ் குணேந்திரன் (பிரான்ஸ்), ஜேம்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பியாபிருந்தினி, ஆரோன், யூலியன், ஜெனீவர், ஸ்ரீவ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 24 - 11 - 96 இல் வவுனிக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஜெயேந்திரன்
(மகன்)
251, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

பலாலி தெற்கு,
வசாவிளான்.

(43804)

## திருமதி தங்கம்மா கந்தையா

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கந்தையா 24 - 11 - 96 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், சற்குணம், மகேஸ்வரி, இரத்தினசிங்கம் (காகித ஆலை, வாழைச்சேனை), தளையசிங்கம், யோகேஸ்வரிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, தயாபரன், ரஞ்சிததேவி, ஜெயலட்சுமி, சோதிநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 25-11-96 அன்று மாலை 3.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தளையசிங்கம்
(மகன்)

4 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(43808)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெனாஸிரின் மனுவை விசாரிக்க பாக்.உயர் நீதிமன்றம் இணக்கம்

இஸ்லாமாபாத், நவ 26

ஜனாதிபதி லெஹாறி தம்மைப் பதவியிலிருந்து நீக்கியது தவறு என முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ செய்த மனுவை கருத்துக்கு எடுக்க பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் இணங்கி உள்ளது.

பெனாஸிர் பூட்டோ தாக்கல் செய்த வேறு இரண்டு மனுக்களை இந்த நீதிமன்றம் நிராகரித்த பின்னர் இந்த மனுவை ஏற்றுக்கொண்டுள்ளது.

வழக்கு விசாரணைகளுக்கான திகதிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

தன்னைப் பதவியிலிருந்து விலக்க அதிபருக்குச் சரியான அடித்தளம் இல்லை என தமது மனுவில் பெனாஸிர் பூட்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் 1993 இல் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்ட பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் நாவாப் ஷெரிப் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டது தெரிந்ததே. (இ-ரி)

## அழகிகளுக்கு பயமுறுத்தல்!

பெங்களூர், நவ. 26

உலக அழகு ராணிப் போட்டியில் கலந்து கொண்ட பல அழகிகள் இந்தியாவில் தங்கியிருந்தபோது தொலைபேசி மூலம் அச்சுறுத்தப்பட்டனர் என உலக அழகு ராணியாகத் தெரிவு செய்யப்பட்ட கிறீஸ் நாட்டழகி ஐரிஸ் ஸ்லீவா கிரேக்கப் பத்திரிகை ஒன்றுக்குத் தொலைபேசி மூலம் அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

தான் உலக அழகுராணியாக இருக்கும் ஒரு வருடகாலத்தில் ஊனமுற்ற சிறுவர்களைப் பராமரிக்கத் தீர்மானித்துள்ளதாக ஸ்லீவா தெரிவித்தார்.

தொலைக்காட்சிச் செய்தியாளராக பணியாற்ற தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## திருமண கோஷ்டி விபத்தில் 21 பேர் உயிரிழந்தனர்!

ராஜஸ்தான் நவ. 26

இந்தியாவின் வடமேல் பகுதி மாநிலமான ராஜஸ்தானில் திருமணக் கொண்டாட்டம் ஒன்றில் கலந்து கொண்டவர்களில் 21 பேர் வீதி விபத்தொன்றில் கொல்லப்பட்டனர்.

பாரம் ஏற்றப்பட்ட டிரக் ஒன்று மோதிய போது உழவு இயந்திரத்தினால் இழுக்கப்பட்ட வண்டி ஒன்றில் இவர்கள் பயணம் செய்து கொண்டு இருந்தார்கள் எனக் கூறப்படுகின்றது. உயிரிழந்தவர்களில் 8 குழந்தைகளும் 13 பெண்களும் அடங்குவர். (இ-ரி)

## இலங்கை அகதிகள் விடயம்: குஜ்ரால்-கருணாநிதி பேச்சு

சென்னை, நவ. 26

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு அகதிகள் வருவது குறித்து புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ராலுடன் தாம் பேச்சு நடத்தியதாக தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

புதுடில்லிக்குச் சென்று நேற்று தமிழகம் திரும்பிய கருணாநிதி சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதைத் தெரிவித்தார்

"இலங்கையில் இருந்து 6 ஆயிரம் அகதிகள் தமிழகம் வந்துள்ளதாக குஜ்ராலிடம் தெரிவித்தேன். இலங்கைத் தூதுவருடன் அகதிகள் நிலை குறித்துப் பேசுவதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.''— என்று கருணாநிதி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-3)

## உலக அரங்கில்

### புலியை கொன்றவருக்கு சிறை!

மொஸ்கோ, நவ. 26

சிறுத்தைப்புலி ஒன்றைச் சுட்டுக்கொன்ற ஒருவருக்கு ரஷ்ய நீதிமன்றம் 5 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்தது.

கொல்லப்பட்ட சிறுத்தைப் புலி, உலகில் உள்ள அரிய இனங்களில் ஒன்று எனவும்-

உலகில் அதுபோன்ற புலிகள் மொத்தமாக பத்தே உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## கார்க் குண்டு வெடிப்பில் அல்ஜீரியாவில் ஐவர் பலி

அல்ஜியேர்ஸ், நவ. 26

அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியேர்ஸுக்கு தெற்கேயுள்ள இடம் ஒன்றில் கார்க் குண்டு ஒன்று வெடித்து 5 பேர் உயிரிழந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்பில் 15 பேர் காயமடைந்தனர். இந்த வாரம் அரசமைப்புச் சட்டத்தில் கொண்டு வர முன்வைக்கப்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பாக கருத்துக்கணிப்பு ஒன்றில் வாக்களிக்க அல்ஜீரிய மக்கள் தயாராகிவரும் வேளையில் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த வாக்கெடுப்பு அறிவிக்கப்பட்டதிலிருந்து வன்முறைகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன எனவும் —

இதுவரை 120க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் — பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-10)

## கிளின்ரன் சீனா செல்வார்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் சீனாவுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

1989 ஆம் ஆண்டில் சென்னமென் சதுக்கத்தில் மாணவர்களின் ஆர்ப்பாட்டம் இரத்தக் களரி மூலம் அடக்கப்பட்ட பின்னர் சீனாவுக்குச் செல்லும் முதல் அமெரிக்க அதிபர் கிளின்ரன் ஆவார்.

வாஷிங்டனுக்கும் பீகிங்கிற்கும் இடையிலான அதிகார பூர்வமான உறவுகளை 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஜனாதிபதி நிக்சன் ஆரம்பித்து வைத்ததிலிருந்து சீனா செல்லும் மூன்றாவது அமெரிக்க அதிபர் கிளின்ரன் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவுக்கு அதிபர் கிளின்ரன் விஜயம் செய்யும் சரியான திகதி இன்னும் குறிப்பிடப்படவில்லை. (இ-10)

## ஆப்கானிஸ்தான் போரில் தலிபான் கை ஓங்குகிறது

காபூல், நவ. 26

காபூலுக்கு வடக்கே நடைபெறும் கடும் மோதல்களில் முன்னாள் அரசாங்கத்துக்கு விசுவாசமான படையினரை பல கிலோ மீற்றர் தூரம் பின்வாங்கச் செய்வதில் தலிபான் இயக்கப் போராளிகள் வெற்றி கண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காபூல் நகருக்கு வடக்கேயுள்ள 2 கிராமங்களை தலிபான் இயக்கம் கைப்பற்றி உள்ளது.

இரு வாரங்களில் முன்னணி நிலையில் இருந்து தலிபான் இயக்கம் நகர்ந்திருப்பது இதுவே முதல் தடவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அரச தரப்பின் கட்டுப்பாட்டிலுள்ள பன்ஷாத் பள்ளத்தாக்குக்கு காபூலில் இருந்து மருந்துப்பொருள்களை எடுத்துச் செல்லவிருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வாகனத் தொடரணியின் சேவை மீண்டும் தொடங்கிய போரினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

### விமானத்தை கடத்தியோர் உயிர் தப்பினர்

கடந்த வெள்ளிக்கிழமை கொமறோஸ் தீவுக்கு அருகில் விழுந்து நொருங்கிய எதியோப்பிய விமானத்திலிருந்து உயிர் தப்பியவர்களில் விமானத்தைக் கடத்திய இருவரும் அடங்கி உள்ளனர்.

# ஆயிரக்கணக்கான உயிர்களை பலிவாங்கும் விமான விபத்துக்கள்

குண்டுகள், ஏவுகணைகள், தொழில்நுட்பக் கோளாறுகள் அல்லது விமானிக்கும் கட்டுப்பாட்டு அறைக்குமிடையே இடம்பெறும் தொடர்புகளில் ஏற்படும் குழப்பம் ஆகியனவே விமான விபத்துகளுக்குக் காரணமாகும். ஆனால் இவற்றுக்குப் பலியாவதோ விலை மதிப்பற்ற மனித உயிர்கள் ஆகும். பி.பி.சியின் சிங்கள சேவையில் இடம்பெற்ற கண்ணோட்டத்தை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

கடந்த 12 ஆம் திகதி இந்தியாவில் புதுடில்லிக்கு அருகில் நடுவானில் இருவிமானங்கள் மோதிக் கொண்ட சம்பவத்தையடுத்து விமான விபத்துக்கள் தொடர்பாக மக்களுக்கு புதிய விழிப்பு ஏற்பட்டுள்ளது.

"வானில் நடந்த விமான விபத்துக்களில் இந்த விபத்தானது துன்பகரமான சரித்திரத்தைப் படைத்துவிட்டது'' என இந்த விபத்துக் குறித்து ஒரு விமர்சகர் தெரிவித்தார்.

இவ்வாறான விமான விபத்துகள் இடம்பெறும் போது விமானத் தொழில் நுட்ப வல்லுநர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிப்பது வழக்கம்.

### "கருடா'' விமான விபத்து

1970 களில் இந்தோனேஷிய "கருடா'' விமான சேவை நிறுவனத்துக்குச்சொந்தமான விமானங்கள் இரண்டு இலங்கையில் விபத்துக்குள்ளாகின.

இவற்றில் ஒன்று ஏழு கன்னிகள் மலை முகட்டில் (நுவரேலியா) மோதியது. அதில் பயணம் செய்த சுமார் 200 இந்தோனேஷியர்கள் கொல்லப்பட்டனர்.

மற்ற விமானம் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அண்மையில் விபத்திற்குள்ளானது.

### டில்லி விமான விபத்து

விமான விபத்துக்கள் ஏன் நிகழ்கின்றன என்பதற்கு பல காரணங்களைக் கூறலாம். ஆனால் விபத்து இடம்பெற்றதும் விபத்துக்கான உண்மைக் காரணங்கள் கண்டுபிடிக்கப்படுவதில்லை.

சாதாரண அறிவைக் கொண்டு விபத்திற்கான காரணம் அனுமானிக்கப்படுவதே அதிகமாக இடம்பெறும் நிகழ்வாகும்.

புதுடில்லிக்குச் சமீபமாக கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற இரு விமானங்கள் மோதிய சம்பவம் குறித்து விமானப் போக்குவரத்து வல்லுநரான சோல் டஷீர் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

"இந்த விமான விபத்துக்கு ஒரு காரணம் மாத்திரம் இருக்கும் என நான் நினைக்கவில்லை பல காரணங்கள் இருக்கக்கூடும்.

உதாரணமாக 2 அல்லது 3 காரணங்கள் இருக்கும். புதுடில்லி இந்திரா காந்தி விமான நிலையத்தைப் பாருங்கள். இது ஒரு சுறுசுறுப்பான விமான நிலையமாகும்.

இருப்பினும் மேற்குப் புறத்திலிருந்து விமானங்கள் வந்து இறங்குவதற்கு ஒரு ஒடுங்கிய பாதையே ஒதுக்கப்பட்டுள்ளது. நடந்து முடிந்த விமான விபத்துக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்'' எனத் தெரிவித்தார்.

தற்போது உலகில் இடம்பெற்று வரும் விமான விபத்துக்களில் 75 விதமானவற்றுக்குக் காரணம் மனிதர்களின் தவறான செயற்பாடுகளே என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

### வெடித்து சிதறிய அமெ. விமானம

அண்மையில் இடம்பெற்ற விமான விபத்துக்களில் மற்றுமொரு விமான விபத்து முக்கிய இடம் பெறுகிறது.

அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்தபோது வெடித்துச் சிதறிய அமெரிக்காவைச் சேர்ந்த பி.டபிள்யு.ஏ. விமான நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 747 ரக விமானம் ஆகும்.

இந்த விபத்தில் விமானத்திலிருந்த 329 பேர் மரணமானார்கள்.

விபத்துக்குள்ளான இந்த பி.டபிள்யு.ஏ. நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் 1969 - 70 வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது அந்த விமானத்திற்கு 25 வயதுக்கு மேலாகிறது.

கலாநிதி வேர்ணன் றொஸ்டின் கருத்துப்படி அதிக காலம் பயன்படுத்தப்பட்ட விமானங்களை சேவையில் ஈடுபடுத்துவதும் விமான விபத்துக்களுக்கு காரணமாகும்.

இதே கருத்தை விமானக் கட்டுமானத் தொழில் நுட்ப வல்லுநரான நிகலொஸ் ஹில்மன் உறுதிப்படுத்துகிறார்.

"போயிங் 747ர''க விமானங்களை உண்மையில் பறக்கும் பேருந்துகள் என்றே கூறவேண்டும். விமானப் பயணத்தில் ஈடுபடும் ஒருவர் தான் பயணம் செய்யவுள்ள விமானம் பாதுகாப்பானதா எனக் கண்டறிய வேண்டும். பயணத்துக்குப் பாதுகாப்பானது எனக் கருதப்படும் விமானங்கள் கூட மின்னலால் தாக்கப்பட்டது போன்று தீப்பிழம்பாக பூமியில் வந்து விழுகின்றன.

இவ்வாறு விமானங்கள் வெடித்துச் சிதறுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

பி.டபிள்யு. ஏ. விமானத்திற்கு என்ன நடந்தது என்பதை எங்கள் நாடு வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை.

இந்த விபத்திற்கு 3 விடயங்கள் காரணமாக அமையலாம்.

முதலாவது குண்டுவெடிப்பு. அவ்வாறெனில் அதற்கான பொறுப்பை தேசியப் புலனாய்வுப் பிரிவு ஏற்க வேண்டும்.

குண்டுவெடிப்பு இல்லையெனில், அது ஏவுகணையால் தாக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்த விமானம் ஏவுகணையால் தாக்கப்பட்டிருப்பின் அதற்கான பொறுப்பை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

குண்டு வெடிப்போ அல்லது ஏவுகணையோ விபத்திற்கு காரணம் இல்லையெனில் விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறெனில் இதற்கான பொறுப்பை பி. டபிள்யு. ஏ. விமான நிறுவனமும் போயிங் விமான உற்பத்தி நிறுவனமும் பொறுப்பேற்க வேண்டும், எனத் தெரிவித்தார்.

குண்டுகள், ஏவுகணைகள், தொழில்நுட்பக் கோளாறுகள் அல்லது விமானிக்கும் கட்டுப்பாட்டு அறைக்குமிடையேயான தொடர்புகளில் உள்ள குழப்பம் ஆகியன விமான விபத்துக்களுக்கு காரணமாக இருப்பினும் விலைமதிப்பற்ற மனித உயிர்கள் காரணமின்றி வீணே பலியாகின்றன. ★

தொகுப்பு: கஜனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

கேபிள் பிரேக் பெண்கள் துவிச்சக்கர வண்டி ரூபா 2150/- மட்டும் (64) 404, மணிக்கூட்டு வீதி, (புட்டு சந்தி), பெருமாள் கோயிலடி யாழ்ப்பாணம். (43793)

தும்பளை ஹூத்மாதா கோயிலடியில் விவசாயம் செய்யக் கூடிய நல்ல பயனுள்ள 3¾ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு; தவத்துரை செந்தில் மணி, ஹூத்மாதா கோயிலடி, தும்பளை, பருத்தித்துறை. (43798)

10 H.P 8 H.P டீசல் என்ஜின்களுக்குரிய சகல உதிரிப் பாகங்களும், பெற்றர் என்ஜினுக்குரிய உதிரிப்பாகங்கள், பிளேற் வெட்டும் கற்கள், அஸ்பெஸ்ரஸ் ருவைன், 15 U.F. கொன்டென்சர் ஆகியன விற்பனைக்கு உண்டு. ஸ்ரீராஜ், வட்டு கிழக்கு சித்தன்கேணி. (வட்டு இந்துக் கல்லூரி அருகாமையில்) (43802)

## மக்கள் கடை

சாவகச்சேரி பொதுச் சந்தை உட்புறத்தில் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்த ''மக்கள்கடை'' மீண்டும் கடந்த வாரம் முதல் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (இ-31)

# யாழ். மாவட்டத்தில் ஜனவரி முதல் புதிய கல்வி நிர்வாக முறை அமுல்

## பூர்வாங்க வேலைகள் பூர்த்தி

அச்சுவேலி, நவ. 26

அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து யாழ். மாவட்டம் புதிய கல்வி நிர்வாக அமைப்பின் கீழ் செயற்படும்.

நான்கு கல்வி வலயங்களும் ஒரு பிராந்திய கல்வித் திணைக்களமும் யாழ் மாவட்டத்தில் செயற்படவுள்ளன.

மேற்படி புதிய அமைப்புக்கள் தொடர்பான பூர்வாங்க வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் மேற்படி வலய கல்வி அலுவலகம் பிராந்தித் அலுவலகம், ஆகியவற்றுக்கான அதிகாரிகள் ஆளணியும் தெரிவு செய்யப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி, யாழ்ப்பாணம் நல்லூர் தொகுதிகளை உள்ளடக்கிய கல்விவலயம் ஒன்று யாழ் நகரில் அலுவலகத்தைக் கொண்டு செயற்படும்.

கோப்பாய், உடுவில் காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை தொகுதிகளை உள்ளடக்கிய கல்வி வலயம் இரண்டின் அலுவலகம் வலிகாமம் பகுதியில் செயற்படும்.

பருத்தித்துறை, உடுப்பிட்டி தொகுதிகளை உள்ளடக்கிய கல்வி வலயம் மூன்றின் அலுவலகம் வடமராட்சிப் பகுதியில் செயற்படும்.

கல்வி வலயம் நான்கின் அலுவலகம் தென்மராட்சிப் பகுதியில் செயற்படும்.

நான்கு கல்வி வலயங்களின் பணிகளையும் ஒழுங்கமைத்து செயற்படுத்தும் பிராந்திய கல்வித் திணைக்களம் மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் கீழ் செயற்படவுள்ளது. (இ-11)

## நீண்டகாலம் கடமை ஆற்றும் தீவுப்பகுதி ஆசிரியருக்கு விரைவில் இட மாற்றம்

தீவகப் பாடசாலைகளில் நீண்டகாலமாக கற்பிக்கும் ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெறுவதற்கு அனுப்பியுள்ள இடமாற்ற விண்ணப்பங்கள் யாழ். கல்வித்திணைக்கள இடமாற்றச் சபையில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு தகுதியானவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும்.

நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை புதிய ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்போது நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ் கல்வி வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர் இ. சிவானந்தன் வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தீவகப் பாடசாலை அதிபர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். (இ-111)

## குத்தரிசி தாராளமாக விநியோகம்

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், தற்போது குத்தரிசியைத் தாராளமாக விநியோகித்து வருகிறது

கிலோ 28 ரூபா வீதம் சங்கக் கிளைகள் மூலம் இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை சன்லைட் சவர்க்காரமும் 1 கட்டி 8ரூபா 75 சதவீதம் தேவையான அளவு வழங்கப்படுகிறது. (இ—15)

## பளையில் இலவச சீருடைகள்

தென்மராட்சி, நவ. 26

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகள் யாழ். கல்விப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சீருடைகள் நேற்று முதல் வழங்கப்பட இருந்தன.

இதேவேளை, தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-117)

## பணிப்பாளர் சபைக்கான தேர்தல்

உரும்பிராய், நவ. 26

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பணிப்பாளர் சபையைத் தெரிவுசெய்வதற்கான முன்னோடி நடவடிக்கையாகக் கிளைக்குழுக்களுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

நவ—30, டிச—1 ஆகிய இரு திகதிகளிலும் காலை 9 மணி முதல் 10 மணி வரை குறிப்பிடப்பட்ட கிளைக் குழுக்களுக்கான நியமனப் பத்திரங்கள் தேர்தல் உத்தியோகத்தரினால் ஏற்றுக் கொள்ளப்படும்எனத்தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார். (இ-154)

## அனுமதிப்படிவம்

சுண்டிக்குளி, கார்மேல் பாலர் பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள விரும்புவோர் அனுமதிப் பத்திரங்களை 30 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலையில் காலை வேளையில் பெற்றுக் கொள்ளலாம்.

— அதிபர்

(43805)

# சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை

## செல்வச்சந்நிதி தொண்டைமானாறு

மேற்படி பேரவை யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் திருவாசகம் — நீத்தல் விண்ணப்பப் பாடல்களைப் பண்ணோடு இசைக்கும் போட்டி ஒன்றினை திருவெம்பாவை காலமாகிய **22-12-96** ஞாயிற்றுக்கிழமை காலை மேற்படி ஆச்சிரமத்தில் நிகழ்த்த உள்ளதாதலினால் ஆர்வமுள்ள பாடசாலைகள் தமது விண்ணப்பத்தினை **10-12-96** ஆம் திகதிக்கு முன் செயலாளர், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, தொண்டைமானாறு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்பாகக் கோருகின்றோம்.

ஆண்டு **6—7** (விரும்பிய மூன்று பாடல்கள்)
ஆண்டு **8—9—10** (விரும்பிய ஐந்து பாடல்கள்)
ஆண்டு **11—12—13** (விரும்பிய பத்துப் பாடல்கள்)

### மாதிரி விண்ணப்பப்படிவம்

1. மாணவர் பெயர் .................. ...............
2 மாணவரின் சொந்த முகவரி ......................
3. கல்வி கற்கும் பாடசாலை ......................
4. கல்வி பயிலும் ஆண்டு ..............................
5. விண்ணப்பதாரரின் கையொப்பம் ..............

...........................................
அதிபரின் உறுதியுரை

*குறிப்பு:*

வெற்றி பெறும் மாணவர்களுக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

(43803)

# தப்பிச் சென்ற படையினரை மீண்டும் வந்து இணைய அனுருத்த அழைப்பு

கொழும்பு, நவ. 26

''தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு இராணுவத்தை விட்டுச்சென்ற படையினர் அனைவரும் மீண்டும் சேவையில் இணைய வேண்டும்.'' பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சேவைக்குத் திரும்புவோருக்கு எதுவித தண்டனையும் வழங்கப்படமாட்டாதென்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

பொல்கொல்ல கூட்டுறவுப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்ற பாசனும்பர சமூர்த்தி முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டத்திலேயே அமைச்சர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

பதின்னான்குவருடகால யுத்தத்தைப் பாதுகாப்புப் படையினர் கடந்த பதின்னான்கு மாதங்களில் வெற்றிப் பாதைக்குத் திரும்பியுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் வசமிருந்த பகுதிகளில் சுமார் 70 சதவீதமானவை இப்பொழுது பாதுகாப்புப் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தில் பயிற்சி முடித்த பின்னர் தப்பிச்சென்றுள்ள சுமார் 11 ஆயிரம வீரர்களை மீண்டும் சேவையில் அமர்த்துவதன் மூலம் யுத்தத்தை விரைவில் ஒரு முடிவுக்குக் கொண்டு வர முடியுமென்ற நம்பிக்கை உண்டு.

இராணுவத்தில் இருந்து தப்பிச்சென்றவர்கள் சேவைக்குத் திரும்புவதற்கான காலக்கெடு இந்த மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. இந்தக் காலக்கெடுவுக்குள் திரும்பாதவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் — என்றார். (இ-ரி)

## படையினரின் சோதனையில் "கேக்"கும் தப்பவில்லை!

கொழும்பு, நவ 26

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த ''நவாலிய கேக்'' கண்காட்சி ஒன்றில் பார்வைக்கு வைக்கப்பட்ட சகல ''கேக்'' குகளும் படையினரின் சோதனைக்கு உள்ளாகின.

''மெற்றல் டிரெக்டர்'' மூலம் சகல ''கேக்'' குகளும் சோதனையிடப்பட்டு கேக்குகளுக்கு உள்ளே குண்டு ஏதாவது இருக்கிறதா என்று சோதனையிடப்பட்டது.

இந்தசோதனையின் பின்பே கண்காட்சியில் வைக்க அவற்றைப் படையினர் அனுமதித்தனர். (இ-3-150)

## வலிகாமம் தெற்கு பகுதியில் காய்ச்சல் பரவுகிறது

உடுவில், இணுவில், கந்தரோடை, சங்குவேலி ஆகிய கிராமங்களில் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

அண்மைக் காலங்களில் இப்பகுதிகளில் பலர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வரும் இவர்களுக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அதிகமான மக்கள் வவுனியாவில் இருந்து இங்கு திரும்பி வந்துள்ளதால், இக் காய்ச்சல் பரவி இருக்கலாம் என வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளையில் மேற்படி கிராமங்களில் மலேரியா நோய் ஓரளவு கட்டுப்பாட்டுக்கு வந்துள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரத்தப் பரிசோதனைகளின்போது கந்தரோடை, சங்குவேலி கிராமங்களில் எட்டுப் பேருக்கு மலேரியா நோய் கண்டிருப்பதாகவும் —

இவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் உடுவில் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-152)

## ஆசிரியருக்கு அறிவுறுத்து

குருநகர், நவ. 26

ஆசிரியர்கள் புதன்கிழமை தவிர வேறு நாள்களில் தமது அலுவல் காரணமாக கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு வருகை தருவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று [illegible] ராஸ்மெயில் தெரிவித்துள்ளார். (இ-51)

வாடிக்கையாளர்களுக்கு

- அல்டி -

எமது ஸ்தாபனம் தற்போது
இல. 75, பெரியகடை, யாழ்ப்பாணத்தில்
இயங்குவதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

— அல்டி

(43775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யாருக்காக யார்?

திருகோணமலை லிங்க நகரில் குடியிருந்த 241 தமிழ்க் குடும்பங்கள் இராணுவத்தினரால் கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டுள்ளார்கள். தமது சொந்தக் காணிகளை— பூர்வீகக் காணிகளை — கைவிட்டுத் தாம் எங்கே போய்க் குடியிருப்பது என்பது தெரியாத நிலையில் அந்த மக்கள் திக்கற்று நிற்கின்றனர்.

திருகோணமலையில் ''பிளாண்டன் பொயின்ட்'' பகுதியில் இராணுவ, கடற்படை முகாம்கள் அமைந்துள்ளன. லிங்கநகரில் தமிழ் மக்கள் குடியிருப்பதால் அந்த முகாம்களுக்குப் பாதுகாப்பில்லையாம்.

''பிளாண்டன் பொயின்ட்' பகுதிக்குக் கிட்டிய தூரத்திலேயே லிங்கநகர் உள்ளது. 1990 ஆம் ஆண்டின் பின்னர் பிளாண்டன் பொயின்டில் இராணுவ, கடற்படை முகாம்கள் நிறுவப்பட்டதும் —

லிங்கநகரில் தமிழர்கள் வாழ்வது தங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று கருதி முன்னரும் ஒரு தடவை இதே பகுதி மக்கள் படையினரால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

எனினும், பாதுகாப்பு அமைச்சு தனது முந்திய முடிவை மாற்றிக் கொண்டு, தமிழர்கள் லிங்கநகரில் வாழ்வது படையினருக்குப் பாதுகாப்பு என்று கருதி அவர்களை மீளக் குடியமர அனுமதித்தது.

இப்போது மீண்டும் லிங்கநகரில் தமிழர்கள் வாழ்வது பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்புக்குக் குந்தகம் என்று கருதி அம்மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள். சம்பந்தப்பட்ட மக்கள் உண்ணாவிரதம் இருந்தும் அரசு நகரவில்லை. நியாயம் வழங்கப்படும் என்று முன்னர் உறுதி அளிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அவர்கள் நிர்க்கதிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

பாதுகாப்புப் படையினரின் பிரதான கடமைகளில் ஒன்று மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகும். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை, கடந்த சுமார் இரண்டு தசாப்தங்களாக அவர்களைப் பாதுகாக்கும் பணி படையினருக்கு இல்லை; அரசுக்கும் இல்லை என்ற நிலைப்பாடு கைக்கொள்ளப்பட்டு வருகிறது.

அது மட்டுமன்றி, படையினரின் பாதுகாப்புக் கருதி தமிழ்ப் பொதுமக்களை என்னவும் செய்யலாம்; எப்படியும் கஷ்டப்படுத்தலாம்; பந்தடிப்பது போல அவர்களை அங்கும் இங்குமாக அலைக்கழிக்கலாம், சீரழிக்கலாம் என்ற அளவுக்கு நடைமுறைக் கொள்கை மாற்றப்பட்டு விட்டது.

அதற்கு நல்லதோர் உதாரணம் லிங்கநகர் மக்களின் விவகாரம்.

இலங்கை அரசு ஜனநாயக அடிப்படையில் அமைந்த அரசமைப்புச் சட்டத்தை அத்திவாரமாகக் கொண்டே அமைக்கப்படுகிறது. அதனால் மக்களாலேயே அரசு, மக்களுக்காகவே அரசு என்ற ஜனநாயகக் கோட்பாடு எந்தக் கட்டத்திலும் நிலை நாட்டப்பட வேண்டும்.

ஆனால் இங்கு அரசின் விருப்பு வெறுப்புகளுக்காக ஒரு பிரிவு மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். மக்களுக்காக அரசன்று, அரசுக்காகவே மக்கள் என்ற எடுகோள் மேலோங்குகிறது.

ஜனநாயக அரசும், அதன் அங்கமான இராணுவமும் மக்களுக்காகவே அரசு என்ற கோட்பாட்டை மீறுவது அல்லது மாற்றுவது விசனத்துக்கு உரியது.

# கைதிகளுக்கு மன்னிப்பு அளிக்கும் அதிகாரம் பிராந்திய சபைகளுக்கு?

## நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஆராய்கிறது

கொழும்பு, நவ. 26

கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு அளிக்கும் அதிகாரத்தை உத்தேச பிராந்திய சபைகளுக்கு வழங்குவது குறித்து கடந்த வெள்ளிக்கிழமை கூடிய அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் ஆராயப்பட்டது.

கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அளிக்கும் அதிகாரம் தற்சமயம் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது.

இந்த விடயத்தில் 12 விதமான குற்றச்சாட்டுக்களின் கீழ் தண்டனை பெறுபவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் அதிகாரத்தை உத்தேச பிராந்திய சபை ஆளுநர்களுக்கு வழங்கலாம் என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஐ. தே. க, நாடாளுமன்ற உறுப்பினர் ஹமீத் கருத்துத் தெரிவிக்கையில் 12 விதமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான அதிகாரத்தை அளிக்கும் போது பயங்கரக் குற்றச்சாட்டுக் கைதிகள் தப்ப வழி வகுக்கக் கூடாது என்று கூறினார்.

முன்னாள் நிதியமைச்சரும் மாத்தறை மாவட்ட எம்.பியுமான றொனி டி. மெல் கருத்துத் தெரிவிக்கையில், 12 விதமான குற்றச்சாட்டுக்கள் குறித்து பொதுமன்னிப்பு அளிப்பது தொடர்பாக குழு நியமிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளார். [இ-3-150]

## அதிபருடன் ஓர் ஆசிரியர் மட்டுமே கடமை

நெடுந்தீவு, நவ. 26

எழுவைதீவு முருகவேல் வித்தியாலயத்தில் அதிபருடன் ஓர் ஆசிரியர் மட்டுமே கடமையாற்றுகிறார்.

இப்பாடசாலையில் முதலாம் ஆண்டுமுதல் ஜி. சீ. ஈ. சாதாரண தர வகுப்புவரை உள்ளது.

அதேசமயம் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரை உள்ள றோமன் கத்தோலிக்க பாடசாலையில் அதிபர் மட்டுமே கடமை ஆற்றுகிறார். (இ-111)

## ஆணைக்குழு நியமிக்க கூட்டணி எம்.பி கோரிக்கை

கொழும்பு, நவ. 26

யாழ்ப்பாணத்தில்காணாமற் போனவர்கள் தொடர்பாக ஆராய ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார். (இ-3-150)

# தமிழரின் நலன் கருதி புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றவேண்டும்

## ஈ. என். டி. எல். எவ் செயலாளர் நாயகம் கேட்கிறார்

கொழும்பு, நவ. 26

விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த காலங்களில் நடந்துகொண்ட விதம் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. தமிழர்களின் நலன் கருதி விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவேண்டும்.

ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (ஈ. என். டி. எல். எவ்.) செயலாளர் நாயகம் ஞானசேகரன் சென்னை ''இந்து'' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு இந்தியா காலம் தாழ்த்தாது முன்வரவேண்டும்.

இந்தியாவின் உதவியுடனே தீர்வு ஒன்றைக் காணமுடியும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களைப் பறிகொடுத்த பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கம் இக்கட்டான நிலையில் இருக்கிறது என்றும் அவர் கூறினார். (இ-3)

## உணவு முத்திரை

நவாலி, நவ. 26

நவாலி ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவுகளில் இடம் பெயர்ந்தவர்களுக்கான நிவாரண உணவு முத்திரைகள் அப்பகுதி கிராம சேவையாளர்களினால் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. (இ-100)

## ப. நோ. கூ. ச. தலைமை அலுவலகம்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தை மீண்டும் பழைய இடத்திலேயே இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் முன்நடவடிக்கையாக, யாழ்ப்பாணம் கொட்டடி சத்திரத்துச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள இக் கட்டடத்தை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## புலிகளின் அறிவிப்புக்கு பல கட்சிகள் வரவேற்பு

கொழும்பு, நவ. 26

வடக்கு—கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்குப் புலிகள் முன்வந்துள்ளதை ஈ.பி.டி.பி., இ. தொ. கா., முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்றுள்ளனர்.

மக்களின் அபிவிருத்தி தொடர்பாக மேற் கொள்ளப்படும் முயற்சிகளுக்கு புலிகள் தடை போடாது. அவ்வாறான பணிக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளது பாராட்டுக்குரியது. அவர்களின் இந்த முடிவு தொடர்ந்து உறுதியாக இருந்தால் அதனை நாம் வரவேற்போம் என்று ஈ. பி. டி. பி. யின் எம். பி. பாஸ்கரன் தெரிவித்தார்.

இ. தொ. கா நாடாளுமன்ற உறுப்பினர் ராஜரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில், நல்ல முன் மாதிரியான இந்த முயற்சியை பாராட்டுகிறோம். எதிர்காலத்தில் இந்நாட்டில் அமையப் போகும் சமாதான வாழ்வுக்குப் புலிகளின் இந்த நன்னோக்கு நடவடிக்கையும் ஒரு காரணமாக அமையலாம் என்றார்.

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர் இலியாஸ் கருத்துத் தெரிவிக்கையில், வடக்கு—கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் புலிகள் இயக்கம் தமது பூரண ஆதரவை வழங்க முன் வந்ததையிட்டு பாராட்டும் அதே வேளை ''மௌன ஆயுத'' நிபந்தனையையும் ஏற்று அரசுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க புலிகள் முன் வர வேண்டும் என்றார்.

அரசின் அபிவிருத்தி வேலைகளுக்குத் தடையாக இருக்கப் போவதில்லை என்று மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டங்களின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் கே. துரை சமீபத்தில் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே கட்சித் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். (இ-3)

## சங்கானைப் பகுதிக்கான கொடுப்பனவு அடுத்த வாரம்

நவாலி, நவ. 26

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கான ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு அடுத்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு கடந்த வெள்ளிக்கிழமை சங்கானை பிரதேச செயலரிடம் கையளித்துள்ளது.

சூரியப்பிரகாசம் 2 ஆம் கட்ட இராணுவ நடவடிக்கையின் போது இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் சுமார் ஆயிரத்து 500 குடும்பங்கள் மீண்டும் மீளக் குடியமர்ந்துள்ளனரென்று தெரிவிக்கப்படுகிறது. (இ-100)

## உள்ளூராட்சித் தேர்தல்களிலும்

# பொ.ஐ.மு. கூட்டணியில் லலித்தின் கட்சி நீடிக்குமா?

## நேரடியாகக் கேள்விக் கணை

கொழும்பு, நவ. 26

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின் போது ஸ்ரீமானி அத்துலத் முதலியின் ஜனநாயக ஐக்கியதேசிய (லலித்) முன்னணி தொடர்ந்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உறுப்பாக இருக்குமா?

— இப்படிக் கேட்கும் கடிதம் ஒன்றை பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜெயரத்ன, ஸ்ரீமானியின் கட்சிக்கு அனுப்பியுள்ளார்.

''தேர்தலுக்கான திகதிகளை அரசு அறிவிக்காமல், எமது நிலைப்பாடு குறித்து எம்மிடம் இப்படிக் கேட்பது நியாயமானதா?'' — என்று ஸ்ரீமானியின் கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீமானியின் கட்சியின் நிலைப்பாடு என்னவென்பதைக் கோருவது என்ற முடிவு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஒன்றில் எடுக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் ஸ்ரீமானியின் கட்சியைத் தவிர்ந்த — பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் உள்ள — அரசியல் கட்சிகள் அனைத்தும் கலந்து கொண்டன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீமானியின் கட்சிக்கும் இடையில் அண்மைக் காலத்தில் முறுகல் நிலை ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்[illegible]. (உ-150)

### நாளை

கார்த்திகை 12

புதன்கிழமை

திதி: துதியை

முற்பகல் 10.56 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

பிற்பகல் 1.44 வரை.

ராகுகாலம்: 12.13 - 1.43

[illegible]நேரம்: 4.43 - 6.13

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## பிரெஞ்சு ஜனாதிபதியுடன் சந்திரிகா பேச்சுவார்த்தை

பாரிஸ், நவ. 26

பிரான்ஸுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்றுக் காலை பிரெஞ்சு ஜனாதிபதி ஷிராக்குடன் உத்தியோக பூர்வ பேச்சுக்களை நடத்தினார்.

இதனையடுத்து இலங்கை ஜனாதிபதிக்கு மதிய போசன உபசரிப்பு வழங்கப்பட்டது திருமதி சந்திரிகா குமாரதுங்கா பிரான்ஸின் உள்துறை அமைச்சர், ஜோண் லொயிட்டெப்றே, தேசிய அரசபேரவையின் தலைவர் பிலிப் செக்குனி ஆகியோரையும் சந்தித்து உரையாடினார்.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், வெளியுறவுச் செயலாளர் றொட்னி வெலடகட், மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி ஏ எஸ். ஜெயவர்த்தனா, இலங்கைத் தூதுவர் திருமதி சுமித்திராபீரிஸ் ஆகியோரும் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா தமது பட்டப்படிப்பை மேற்கொண்ட ஸ்ரோபன் பல்கலைக் கழகம் நேற்றிரவு அவருக்கு விருந்துபசாரம் அளிக்க ஏற்பாடுசெய்து இருந்தது.

இந்தப் பல்கலைக் கழகத்தின்வேந்தராகப் பணிபுரியும் திருமதி நிச்செஜன்ரோமம் தோலோ இந்த விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்திருந்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச ஊழியர்கள்

# ஓய்வுபெற 20 வருடங்கள் சேவையாற்ற வேண்டும்

அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கு ஆகக்குறைந்தது தகுதிகாண் கால எல்லை 10 வருடத்தில் இருந்து 20 வருடமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் மாத நடுப்பகுதியில் இருந்து இந்த விதி நடைமுறைக்கு வரும் எனத் தெரியவருகிறது.

பொதுநிர்வாக அமைச்சு இது தொடர்பான மற்றுமொரு திருத்த சுற்றறிக்கையைத் தயாரித்துள்ளதாகவும்—

ஓரிரு நாள்களில் அந்தச் சுற்றறிக்கை திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3-150)


## ராகவன் கல்வி நிலையம்

பலாலி வீதி, உரும்பிராய்.

**1996-11-29** முதல் ஆரம்பமாகவுள்ளது


ஆண்டு 6 தொடக்கம் A/L வரை வகுப்புகள் நடைபெறும்.

பொருளியல் — திரு. சண்
கணக்கியல் — திரு. கொலின்
வர்த்தகம் — திரு. முரளி
அளவையியல் — திரு. சர்மா

— நிர்வாகி

(43806)


## நன்றி நவிலலும் சபிண்டீகரண அழைப்பும்



அமரர்

**காசிப்பிள்ளை நவரத்தினம்**
(நவம்)

(உசனைப் பிறப்பிடமாகக் கொண்ட, இளைப்பாறிய உத்தியோகத்தர் (R. O) சாவகச்சேரி நகரசபை)

தோற்றம்: **03-04-1924** மறைவு: **29-10-1996**

எங்கள் குடும்பத்தின் தலைவராகப் பல்லாண்டு காலம் வாழ்ந்து பரமபதமடைந்த காசிப்பிள்ளை நவரத்தினம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள், மலர்வளையம் சூட்டிய கொமர்ஷல் வங்கியின் அதிகாரப் புருஷர்கள் ஆகியோருக்கும், அஞ்சல் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், நோயுற்ற வேளை சிகிச்சையளித்த வைத்திய நிபுணர்களுக்கும், இதர உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (27-11-1996) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியை மற்றும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ந. நவக்குமார் (மகன்),
உசன்,
மிருசுவில். (43786)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

# அரசு - புலிகள் நிபந்தனை இன்றி யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும்

## ரெலோ செயலாளர் நாயகம் கோருகிறார்

கொழும்பு, நவ. 26

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் இன்றைய சூழ்நிலை—

தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகள்—

அப்பாவிப் பொதுமக்களின் மரணங்கள் — இவற்றுக்கு முடிவு கட்ட வேண்டுமானால் புலிகளும் அரசாங்கமும் யுத்த நிறுத்தம் செய்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் எதுவித நிபந்தனையுமின்றி குறிப்பிட்ட காலவரையறைக்குள் பேச்சுக்களை நடத்தி முடிக்க வேண்டும்''

ரெலோ இயக்க செயலாளர் நாயகம் கே. சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை அரசுக்கு எதிராகக் கொண்டு வந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளின் பலத்துடன் ஆட்சி செய்யும் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயல்படுகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (இ-3-150)

## கிரனேட் தாக்குதல்: இருவர் கைது

கொழும்பு, நவ. 26

நேற்று முன்தினம் திருகோணமலை டொக்யாட் பகுதியில் இடம் பெற்ற கிரனேட் தாக்குதல் சம்பவத்தையடுத்து தேடுதல் நடத்திய இராணுவத்தினர் இருவரைக் கைது செய்துள்ளனர். (இ-3-150)

## வடக்கில் மழை

குருநகர், நவ. 26

கடந்த இரு தினங்களாக யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக யாழ்ப்பாண மக்களின் சாதாரண வாழ்க்கைநிலை மிகவும் பாதிப்படைந்துள்ளது. (இ-51)

## இலவச சீருடை

குருநகர், நவ. 26

நல்லூர் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்குரிய இலவச சீருடைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் வைத்து வழங்கப்பட உள்ளதாக நல்லூர்க் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பீ. அருளானந்தம் பாடசாலை அதிபர்களுக்குத் தெரியப்படுத்தி உள்ளார். (இ-51)

### புலிகளின்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த தபால் தொடர்பு பிரதியமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி இணைப்புக் குழுத்தலைவருமான எம். எல். ஏ. ஹிஸ்புல்லா முன்வந்துள்ளார்.

ஒரு கோடி ரூபா செலவில் தாந்தாமலை வீதியைப் புனரமைக்கவும், மகிழடித்தீவுக்கு மின்சாரம் வழங்கவும் அவர் முன்வந்துள்ளார்.

மகிழடித்தீவு மின்சார இணைப்புக்கான இயந்திரங்கள், பொருள்கள் ஆகியவற்றை அங்கு அனுப்ப செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3-150)

### கடற்படையினர்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பேசினார்.

இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மீனவர்களுக்கு அவர் உறுதியளித்தார்.

நாலரைக் கோடி ரூபா செலவில் ராடர் கருவியுடன் கட்டப்பட்டு வரும் 5 அதிநவீன படகுகளில் ஒன்று இராமேஸ்வரம் பகுதியில் காணாமல் போகும் மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (இ-4)

### விமான—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காகச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து நடந்ததாக நம்பப்படுகிறது (இ-4-10)

### பொலீஸார்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச் சம்பவத்தில் காயமடைந்த [illegible] பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (இ-3-ரி)

வவுனியா முகாமில்

## போதிய பராமரிப்பு இன்றி தொய்வு நோயாளி மரணம்

கொழும்பு, நவ. 26

வவுனியாவில் அகதி முகாம் ஒன்றில் தங்கி இருந்த மல்லாகத்தைச் சேர்ந்த ஒருவர் போதிய பராமரிப்பு இல்லாத நிலையில், தொய்வு நோயினால் வவுனியா ஆஸ்பத்திரியில் இறந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் வாசியான அருச்சுனர் சுந்தரலிங்கம் (56 வயது) என்பவரே மரணமானவர் ஆவார்.

இவரின் மரணம் குறித்து வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரி கிஷோர் விசாரணை நடத்தினார்.

இறந்தவரின் மகன் சாட்சியம் அளிக்கையில், ''எனது தந்தை தொய்வு நோயாளி. தாய் இயலாதவர். எங்கள் மூவரையும் தனித்தனி முகாம்களில் தடுத்து வைத்ததால், நோயால் அவதியுற்ற எனது தகப்பனாரைப் பார்க்க முடியாமல் இருந்தது. இன்று அவரைச் சடலமாகவே காண்கிறேன்'' என்றார். (இ-3-150)

## 2 இளைஞர்களின் சடலங்கள் வவுனியாவில் பொலீஸ் மீட்பு

கடந்த வாரம் வவுனியாவில் இரு இடங்களில் இளைஞர்கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

வவுனியா மீன்சந்தைக்கு முன்பாக தொண்டை நெரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 25 வயது நிரம்பிய இளைஞனின் சடலமும்—

மற்றொரு இடத்தில் சாரம் அணிந்த இளைஞன் ஒருவரின் சடலமும் — பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (இ-3-150)

## குருநகர் ஆஸ்பத்திரியில் மருந்துக்குத் தட்டுப்பாடு

குருநகர், நவ. 26

குருநகரில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற சாதாரண வியாதிகளுக்குரிய மருந்துகள் கூட இந்த ஆஸ்பத்திரியில் இல்லை.

இந்த ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர்களுக்கு 'அன்ரிபயற்றிக்ஸ்' விற்றமின் குளிகைகள் கூட இல்லாததால், வெளியில் வாங்குமாறு சீட்டு எழுதிக் கொடுக்கப்படுகிறது.

இப்பகுதியில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் பணம் கொடுத்துக் கடைகளில் மருந்து வாங்குவதற்கு வசதியற்றவர்களாகவே உள்ளனர்.

ஆஸ்பத்திரியில் மருந்து வகைகள் இல்லாததால் பலரும் நோயைத் தீர்க்க முடியாமல் அவதிப்படுவது மட்டுமன்றி —

தொற்று நோய்கள் பரவும் ஆபத்தும் உருவாகியுள்ளது.

குடாநாட்டில் உள்ள ஏனைய அரசினர் வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் கணிசமான அளவிலேனும் வழங்கப்படுகின்றது. எமது பகுதி மட்டும் புறக்கணிக்கப்படுவது ஏன் என்று இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். மருந்துத் தட்டுப்பாடு எப்போது நீங்கும் என்றும் அவர்கள் வினா எழுப்புகிறார்கள். (அ-51)

## பங்கீட்டுக்கு மீண்டும் 3 கிலோ சீனி

யாழ்ப்பாணம், நவ. 26

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள சீனித்தட்டுப்பாட்டையடுத்து 'அ', 'உ' பங்கீட்டு அட்டைகளுக்கு, ஒவ்வொரு குடும்பத்துக்கும் மூன்று கிலோ சீனி நேற்று முதல் ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படுவதாகச் செயலக அதிகாரி தெரிவித்தார்.

தீபாவளியை யொட்டி ஏற்கனவே 3 கிலோ சீனி ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்பட்டது தெரிந்ததே. (இ-3)

## 7,371 பேர் யாழ்ப்பாணம் வந்தனர்

கொழும்பு, நவ. 26

கடந்த ஏழு மாத காலத்தில் வவுனியாவில் இருந்து 7 ஆயிரத்து 371 பேர் யாழ்ப்பாணத்துக்கு மீளக் குடியேறச் சென்றுள்ளனர் என்று வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார். (இ-3)

## கைத்தறி நூல்வகைகள்

யாழ்ப்பாணம், நவ. 26

கைத்தறித் தேவைகளுக்கான நூல்வகைகள் வடக்கு—கிழக்கு மாகாணசபையினால் கப்பல் மூலம் நேற்று அனுப்பி வைக்கப்பட்டன என்று யாழ்ப்பாணம் பிரதேச செயலர் க. குணராசா தெரிவித்தார்.

பதிவு செய்த நிறுவனங்கள் றக்கா வீதியிலுள்ள வடக்கு—கிழக்கு மாகாணசபை இணைப்பு அதிகாரியுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-மி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org